



ஆதாரம்:
சன்டாக்கான் மறைமாவட்ட
ஆயர்மாமன்ற தயாரிப்பு அறிக்கை

திருத்தம்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட
மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்:
apidirectorkl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 39/2023

கருத்துத் திரட்டு: பலரும் "ஒன்றாகப் பயணித்தல்" என்பதன் பொருளை உனர்ந்துகொண்டனர். இந்த உணர்வு தொடரும் என்றும் பல்வேறு இனம் மற்றும் கலாச்சார சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் இருப்பதைத் தொடர்ந்துக் காணவேண்டுமென்றும் நம்புகிறார்கள். இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. சமூகத்தில் அனைவரின் பங்கேற்பையும் மேம்படுத்த நம்முடைய நடைமுறைகள், போக்குகள், மற்றும் அணுகுமுறைகளைப் மறுபரிசீலனைசெய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

சண்டக்கான் மறைமாவட்டத்தின் சின்னத்தில் காணப்படும் கலாச்சாரஅடையாளம் இது. படகு பல இன, பல கலாச்சாரங்களைக் கொண்ட 5 பங்குகள் ஒரே தூரநோக்கோடுப் பயணிக்கின்றன. படகு - தெய்வீக ஒளியோடு பிரகாசிக்கும் திருஅவை. வெவ்வேறு நிறங்களில் உள்ள ஏழு மனிதர்கள் சமூகத்தின் பல இன மற்றும் பல கலாச்சாரங்களைக் குறிக்கின்றனர். இயேசு கிறிஸ்துவின் சிலுவை திருஅவையின் மையமாகவும், அவர் மட்டுமே நமது நோக்கமாகவும் இருக்கிறார். இங்கிருந்து தான் நமது நம்பிக்கையின் தொடக்கமும் முடிவும். (எபி 12:2) தூய ஆவியார் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட சமூகமாக மாறுவதற்கான நமது பயணத்தில் ஒருவருக்கொருவர் அன்புடன் பணிசெய்கிறார்.

நிறைவு: மறைமாவட்டத்தை மேம்படுத்துவதற்கான 6 தூதுரைப்பணி இலக்குகள்:

அ) நம்முடைய வாழ்க்கையின் உச்சமாக இருக்கும் நற்கருணையில் துடிப்புடன் ஈடுபடவும் திருஅவையில் பங்கெடுப்பதையும் ஊக்குவித்தல்

ஆ) வேற்றுமையிலும் ஆவியில் ஒன்றித்திருத்தல்.

இ) தொடர் உருவாக்கப் பயிற்சிகள்

ஈ) திருஅவையின் சமூகப் போதனைகளை புரிந்துகொள்வதன்மூலம், நற்செய்தியின் மதிப்பீடுகளை வாழ்ந்துகாட்டுவது

உ) இறை அழைத்தல்

ஊ) குடும்ப மதிப்பீடுகளை வளர்ப்பது.

23&24 செப்டம்பர் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

ஆண்டின் பொதுக்காலம் 25 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)




மாதாந்திர கருப்பொருள்:
திருஅவையும் விளிம்பு நிலையில் வாழும் மக்களும்

மாதாந்திர நிகழ்வு:
உலக குடியேற்றவாசிகள் மற்றும் அகதிகள் தினம்

ஆயர்மாமன்றத்தின் செயல்முறையில் ஈடுபடுவதன் மூலம், நாம் ஆயர்கள் மாமன்றப் பேரவையில் பங்கு கொள்கிறோம் என்பதை உணர்கின்றோம். இது மறைமாவட்ட தூரநோக்கு மற்றும் தூதுரைப்பணியை சிறப்பித்து உறுதிசெய்கிறது. இது நம்முடைய மேய்ப்புப்பணி திட்டத்தை மதிப்பாய்வு செய்யவும், நம்முடைய மறைமாவட்ட மேய்ப்புத்திட்டத்தில் நம் வாழ்க்கை முறையைப் புதுப்பிக்கவும், புதிய தீர்மானங்களை எடுக்கவும் உதவியது. மற்றும் ஒருவருக்கொருவர் கவனமாகச் செவிமடுப்பதின்வழி இணைந்துப் பணிசெய்யவும் முன்னேறுவது. (ஆயர் ஜூலியன் லியாவ் அவர்களின் பேரவைக்கான மறைமாவட்ட அறிக்கையின் முன்னுரை)